328

ஓம் தத்ஸத்.

ஆஞ்சநேயர் துணை. ஸ்ரீவில்க்ஷ்ணானந்த குருசகாயம்.

1924-ம் ௵ பிப்ரவரி ௴ 5௳

# மகாத்மா காந்தி

## சிறைச்சாலையிலிருந்து விடுதலை

மவுலானா ஷவுக்கத்தலி முஹம்மதலி
மற்றுமுள்ள தேசாபிமானிகள் பேரிலும்
கதராடை பேரிலும் பாடிய

அலங்கார

## காவடிச்சிந்து.

1 4 ... 1924




இஃது
திண்டுக்கல் தாலூகா சித்தரேவ் கிராமம்
**வா. முகம்மதலி பாவலரவர்களால்**
இயற்றியதை
மதுரைத்தாலூகா வில்லாபுரம்
பி. கே. நாராயணன் அன்கோ.,
புரோப்ரைட்டர்
**பி கே என் பொன்னுசாமி பிள்ளையால்**
...ர் சுப்பிரமணிய விலாஸம் பிரஸில்
...திப்பிவிக்கப்பட்டது.
ரிஜிஸ்டர். ( அணா 1.

1924.

நுG
N20.
170862

ஓம் தத்ஸத்

ஆஞ்சனேயர் துணை. ஸ்ரீவிலக்ஷணனந்த குருசகாயம்.

# மகாத்மா காந்தி விடுதலை

விருத்தம்.

ஆதிதன் கிருபையாலும் அஹமதர் ஹபா அத்தாலும்
நீதிசேர் முஹையதீன் றம் நேற்மையின் பறக்கத்தாலும்
பாதகஂ ஜெயிலைவிட்டு பாற்தனில் காந்திவந்த
செய்தியானெடுத்துறைக்க ஜெகமதிலாதி காப்பு.

எட்டியாபுரம் ராஜப்பாட்டு தெம்மாங்கு மெட்டு.

1 காந்திமகான் விடுதலையின்—காக்ஷியதை எடுத்துறைப்பேன்
சாந்தகுணமுடைய சர்ஜனரே—கேட்டிடுவீற்
சந்தோஷம்நாடும்—மன—சஞ்சலங்கள் ஓடும்

2 இந்தியா சுகம்பெறவே—ஏகினர் ஜெயில் தனக்கு
சிந்தை மகிளநாமும்—சீக்கிரமாய் வெளியில் வந்தார்
விந்தையதைகேளும்—இனி—வேடிக்கைகள்பாரும்

3 விளம்பர சபைதலைவர்—வெளியிட்ட அரிக்கைகேளும்
நலன்பெறவே காந்திமகான்—நாடியேதான் வைத்தியர்கள்
திரேகமது சொஸ்த்தம்—பெருகவென்றால் மொத்தம்

4 ஆளிக்கறையோரம்—ஆறுமாசகாலம்வரை
நாளிற் சஞ்சாறஞ்செய்தால்—நலமடையுந்திரேகமது
என்றுறைத்தார்கேளும்—இனி—நன்றியதுகூறும்

5 பாம்பை கவர்மெண்டுக்கு—பகரிடவே இச்செய்திகள்
சாம்பசிவனருளால் சட்டமதையொத்து பார்த்து
கர்னல்மாட்டாக்கரிய—நம்—காந்திமகான் தெரிய

6 கி. பு. கோ. நானூத்திதொண்ணுத்தி ஒண்ணும் பிரிவின்
லாப்படி விடுதலைக்கி—நலமுடன்வஜாவு செய்ய
இந்தி[illegible]வர்மண்டாற் எடுத்துரைக்க கண்டாற்

7 நிபந்தனையாதுமன்றி—நீனிலத்தின் தண்டனையை
சுபமுறவே காந்திமகான் சுருதியினில் றத்துச்செய்து
விடுதலையுஞ் செய்தார்— உலகர்மிகமகிழ்ந்தார்

8 ஜெகமதிலே பிப்ரவரி செப்பும்—ஐந்தாந்தேதியில்
சுகமுடனே ஜெயிலைவிட்டு—சுந்தரம்போல் காந்திமகான்
அகமகிளவந்தார்—நல் அன்பதயேதந்தார்

9 இந்து முஸ்லீங்களேநீர்—இனியக தருணைதன்னை
சிந்தைமகிழ்ந்துடுத்தும்—சீக்கிரஞ் செல்வங்கிடைக்கும்
சுதந்தரவாள்வும்—கிட்டும்—சுயருஜ்ய வழ்வும்

10 காந்திமகான் ஜெயிலைக்—கடந்து வெளிவரவே
பூந்தி விலேப்பியுடன்—பூலோகமெங்கினுமே
சற்க்கரையும் பகர்ந்தார் மனம்—சந்தோஷமடைந்தார்

11 இந்தியா தேசமெங்கும்—இனியபஜனைகளும்
சிந்தைமகிழ்ந்துமிக—சிறப்புக்கொண்டாடினதும்
என்னவென்றுசொல்வேன்—இயன்றைவறைபுல்வேன்

12 சென்னைகல்த்தாபாம்பை—சேலம் திருச்சிதஞ்சை
கன்னியமதுரை திருநெல்வேலி—மலயாளம்
எங்குங்கொண்டாட்டம் இனிதான காங்கிரஸ் கூட்டம்

13 இன்றுள்முகமதலி—எடுத்துறைத்தேன் கவிபிதனை
கண்ணிய முடன்பாடி—கனவான்கள் மனமகிள
சித்ரேவ் நகர்வாசன்—பிகு—சிறப்புடயநேசன்

### ஸ்வாராஜ்யக்கட்சி வெற்றியின் மூதற்பயன்.

(நமது விசேஷ நிருபரிடமிருந்து)

டில்லி, பிப்ரவரிமீ 5—சொல்லப்பட்டது இன்று இந்தியா சட்டசபை கூடுமுன், மகாத்மாகாந்தியை நிபந்தனையில்லாமல் விடுவித்துவிட்ட சமாச்சாரம் அறிவிக்கப்பட்டது. வைத்தியர்களின் ஆலோசனையை அனுசரித்து மகாத்மா நிபந்தனையின்றி விடுவிக்கப்பட்டிருக்கிறார். சட்ட சபையிலுள்ள அனேகம் உத்தியோகப்பற்றில்லாதவர்களை நான் கண்டு பேசியதில் இந்தவிடுதலை சம்பந்தமான அறிக்கையை 2 வாரங்களுக்கு முன்னமேயே வெளியிட்டிருந்தாலாவது ராஜப்பிரதிநிதி தமது பிரசங்கத்தில் அதைத் தெரிவித்திருந்தாலாவது தேசத்தாருக்கு திருப்தியேற்பட்டிருக்குமென்றும் ஒரு நல்ல சந்தர்ப்பத்தை ராஜப்பிரதிநிதி இழந்து விட்டாரென்றும் ஒரு மனதாக அபிப்பிராய தெரிவித்தார்கள். ஸ்வராஜ்யக்கட்சியாரும் அல்லாதவரும ஒ

றபட்டுப்போனதைப் பார்த்து கவர்ன்மெண்டார் தங்களுக்கு நிச்சயம் தோல்வி யேற்படுமென்பதை உணர்ந்த பின்னரே மகாத்மாவை விடுவிக்கும்படியான நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டுவிட்டதென்று சொல்லப்படுகிறது, மகாத்மா விடுதலை ஸ்வராஜயக்கட்சியாருடைய முதற்பயனென்று சொல்லக்கூடும்.

மகாத்மா காந்திக்கு தேகநிலை குணப்பட்டு விட்டது
பூராவாக சொஸ்தமடைந்து விட்டார்

விருத்தம்.

இந்தியா வாழ் சகல ஹிந்துடன் தீன் குலத்
திணிய செம்பவளமணியே

இன்பமாய் காங்கிரசை இவ்வுலகத்தினில்
இயற்றிய வாழுமணியே

வந்தே மாதரமென்று சந்தோஷமாய்ச்
சொல்லு வாக்கருளித்தமணியே

வையகம் தன்னிலே கைராட்டினபொருள்
வரவழைத்திட்டமணியே

மந்திரமெடுத்துமே மண்ணுலகில் எல்லோர்க்கு
மதுவொழித்திட்டமணியே

மார்க்கமதம் ஒன்றென தீர்க்கமாய் லெகசரில்
மகிழ்ந்துரைத்திட்டமணியே

அந்தநாள் அரசுபோல் இந்தநாள் செங்கோலை
ஆள்க அறிவிக்குமணியே

அவனியில் சுயராஜிய அண்ணலென்றுரைத்திடும்
அருள்ஞான காந்திமணியே

பாட்டு.

திண்டக்கூடாது—என்றமெட்டு

கதர் வாங்கலியா—சுதேசி
—ஸ்ரீ வாங்கலியா—கைராட்டிண

விதவிதமாய் சிலுக்குகட்டி வெளியில் புறப்பட்டாலும்
ூதக்கொள்கை மாற்றிவிடும் மல்லு மில்லு செக்குத்துணி க

170842
170862

அல்லாஹூ அக்பர் யென்று அன்பாளர் செய்த கதர்
பொல்லாத மூர்க்கர்களை போக்கடிக்க வந்த கதர் க
வந்தே மாதரமென்று வண்மையாக செய்த கதர்
ஹிந்து முஸ்லீம்களுக்கு யின்பந்தரும் காந்தி கதர் க
திருநைநகர் நத்தரொலி திருவடியில் சேர்க்குங்கதர்
கருணையில்லா கசடர்களை கண்டிக்க வந்த கதர் க
அங்கொரு காஜிகமால் அன்வர்பாஷா மெச்சுங் கதர்
எங்கும் பிரபல்யமாக இந்தியாவில் நெய்த கதர் க
ஜெகமெங்கும் கீர்த்திபெற்ற ஜெனித்த சுயராஜ்ய கதர்
அகமகிழ ஆடவர்பெண் அனைவோரும் உடுத்துங் கதர் க
தீராத தீவினையைத் தீர்க்குமிந்த காந்தி கதர்
நேருத நன்மைகளை நேர்த்தியாக சேர்க்குங் கதர் க
பதியான வந்தகதர் பக்தியுடன் கட்டுங்கதர்
மதிமயக்கும் கள் குடியை மறக்கவைக்கு மிந்தகதர் க
பாரெங்கும் கீர்த்திபெற பாவலர்கள் பாடுங் கதர்
ஊரெங்கும் தேசபக்தர் உருதியுடன் கட்டுங்கதர் க
பச்சை சிகப்புகதர் பள பளப்புண்டான கதர்
இச்சையுடன் எல்லோரும் இந்தியாவில் கட்டுங்கதர் க
சிறியோர் பெரியோரெல்லாம் சிறப்புடனே கட்டுங்கதர்
அறிவாளர் கொண்டாட அழகாயமைந்தகதர் க
மண்டலம் புக மிந்த மகிமையுள்ள காந்திகதர்
சண்டாள பாதகரை சதிசெய்ய வந்தகதர் க
வாகான இந்தியர்கள் வாய்மையாக நெய்தகதர்
ஆகாயகப்பலெல்லாம் அக்கரைக்கே ஓட்டுங்கதர் க
ஒப்பாருமில்லா இந்து உத்தமர்கள் நெய்த கதர்
துப்பாக்கிகுண்டுகளைத் துறத்துதற்கு வந்தகதர் க
ஸ்ரீரங்கநாயகரின் திருவடியில் சேர்க்குங்கதர்
பீரங்கிகுண்டுகளைப் போக்குதற்கு வந்தகதர் க
புண்ணியமிகுந்தநல்ல பூசுரர்கள் பூணுங்கதர்
அன்னுபரையோட்ட வேதான் ஆத்மசக்தியானகதர் க
சுயராஜ்ஜியமடைய சூட்சம்மிககாட்டுங்கதர்
துயரோட்டிவாழ்வுபெறத் தூண்டிவிடுங் காந்திகதர் க
முதியவர்கள் திருக்கரத்தால் முறைப்படி நெய்தகதர்
மதிமயக்குங்கள் குடியைமறக்கவைக்கு மிந்தக்கதர் க

சிந்தக்கடல்கடந்து சீமையெல்லாம் போகுங் கதர்
இந்தியர் கைத்திறத்தையங்கே எடுத்துரைக்கும் காந்திகதர் க
காணாதகாக்ஷியெல்லாம் காட்டுமிந்த காந்திகதர்
மேனாட்டு மில்லுகளை வீணாக்கவந்தகதர் கீ
பூமகளான மாதா பூரித்தணியுங்கதர்
க்ஷேமம் தருமவள்கை ஜெயக்கொடிமேலாடுங்கதர் க
செந்தமிழ் பாவெங்கும் செழிக்கும் திருநசைநகரில்
சுந்திரன் ஜன்னபாவும் சொல்லுங்கவி மின்னுங்கதர் க

## வேறுபாட்டு.

செந்தமிழுலகினில்—என்ற மெட்டு.

மக்கந்தனில் பிறந்த முஹம்மத் முஸ்தபா ரசூல்
மன்றாட வேணும் நபியே—உங்கள் உம்மத்தில்
பாவுலாணு ஷவுக்கத்தலியே

முடுக்கு.

ஹக்க நிடத்தில்துவா முஹம்மதலியவர்க்கு
பக்க உதவியுடன் பாது கார்க்கவேணும்

பகுதாதில் வாழும் நாதரே—மகிமையுள்ள
முகையதீன் அப்துல் காதிரே மக்கந்

அங்கோராவில் வசிக்கும் காஜிமுஸ்தபா கமால்
அலங்காரம் சொல்லவே நானே—பேப்பரைப்பார்த்து
அகமகிழ்ந்து பாடினேனே

முடுக்கு.

திங்கள் முகத்தளகர் தீரா கமால் பாட்சா
மங்களமுடன் தீன் எங்கும் முழங்கிட

மகிமையை கொஞ்சங்காட்டினார்—சமர்னாதேசம்
மஹான்போய் கொடியை—நாட்டினார் மக்கந்

நல்வாக்கியத்தைக்கொண்டு நாக ரீகமாயெங்கும்
நவிலும் கிலாபத் பற்றியே—றெக்சர்கள் செய்து
நாடெங்கும் வாரார் சுற்றியே

முடுக்கு.

கல்நெஞ்சமுடைய கள் குடியோர்க்கு
கடுவென நினைத்து கருத்தி லுதிக்கும்படி

கதிர்போல் ஸத்சங்கம் செய்தவர்—மஹாத்மா காந்தி
கதரை உடுத்தச் சொன்னவர் மக்கந்

காந்தி மஹானைப்பற்றி இந்தியா தேசத்துக்குள்
கண்காக்ஷி காணலாச்சுதே—எட்டுக்கால் பூச்சி
[illegible]ட்டும் கூண்டில் போச்சுதே

முடுக்கு.

கண்ட கனவான்களை கருணை கூர்ந்து பெல்லோர்
கதரை உடுத்தி பொல்லா கள்ளை விலக்கிடுவீர்
கண்காக்ஷி வேறே வேணுமா—மஹாத்மாகாந்தி
கட்டளை மீறலாகுமா மக்கந்

மஹமதியர் மதத்தில் மாணிக்கமாய் விளங்கும்
மவுலானா முஹம்மதலியே—அவர் பிரசங்கம்
மண்டல மெங்கும் கியாதியே

முடுக்கு.

சகல மதங்களை சாற்றி ஒருமதமாய்
ஜெகமெங்கும் புகழ்பெற்று ஜெயக்கொடி நாட்டிடும்
ஷவுக்கதலியின் திறமை—சங்கத்திலெங்கும்
சபாஷ் யென்கிற பெருமை மக்கந்

கல்கத்தா கிருச்சிமுதல் காபூல் தேசங் ளெல்லாம்
காங்கிரஸ் கிலாபத் பற்றியே—லெக்சர்கள் செய்து
ஜனமாய் வாரார்கள் சுற்றியே

முடுக்கு.

கல்பிலுதிக்கும்படி கருத்தா யெடுத்துரைக்கும்
கல்விக் கடலாகிய கண்மணி இருவரும்
காந்திமகானும் வாழ்கவே—காங்கிரசில் சேர்ந்த
கனவான் யாபேரும் வாழ்கவே மக்கந்
காந்தி மகான் புஸ்தகம் வாங்கி வாசிக்கும்
கனவான்களெல்லோரும் வாழ்கவே—கருத்துடனே
கேழ்க்கும் ஜனங்கள் வாழ்கவே

முடுக்கு.

அன்புடனிக்கவி அச்சிடச் செய்தவர்
ஆண்டவன் கிருபையால் அனைவரும் வாழ்க
அன்பாளர் என்றும் வாழ்கவே-இன்பமாய் கவி
இசைத்த ஜன்னாபா வாழ்கவே மக்கந்

## வேறுபாட்டு.

பூமிமெச்சிடும்—என்ற மெட்டு.

வாக்கில் சரஸ்வதி வாசஞ்செய்யும்
டாக்டர் ராஜனும் விசுவானும்
நண்பர் நேசனும்—காங்கிரேஸ்

வைராக்கிய கொள்கையை
வைத்து மனதோடு நின்றாரே
சிறை சென்றாரே
ஜெகமெங்கும் புகழ் பெற்ற
மகம்மது சேன்சாயப் வாக்குமே
லெச்சர் ஊக்கமே ஜனம் கேழ்க்குமே—அவர்
அகமகிழ்ந்து சென்ட்ரல் ஜெயிலில்
அடைந்தாரே அறிவீரே
பெரியோர் சிறியோரே
சாமிநாத சாஸ்திரி என்றால்
சகலரறிவார்களே சகோதரர்களே
ஞானவான்களே—நல்ல
சாந்தகுணமுள்ளோர்
சந்தோஷமாய் ஜெயில் சென்ற ஊர்
திரிசை என்ற ஊர்
தேச தொண்டர் என்று பாசமுடனுழைத்த
தீரராம் சுத்த வீரராம் நல்லசூரராம்—குடியால்
நாசமடைவோரை
நயந்து கெஞ்சிக் கேள்க்கபோனாரே
ஜெயில் ஆனாரே
குவலய மெச்சிடும் கோதண்டராமய்யர்
கீர்த்தியே மனப்பூர்த்தியே
வெகுநேர்த்தியே நல்ல
குணமுள்ள தொண்டர்க்கு
தலைவராகயிருந்து வந்தாரே
சிறை புகுந்தாரே
வந்தே மாதரமென்று ஹிந்து முஸ்லீம் ஜனம்
நாடியே எல்லார் கூடியே
வாரார் கோடியே—ஜெயில்
சந்தோஷமாய் போக ஜன்னபா
கண்ணார பார்த்தேனே
கவி கோர்த்தேனே
இந்து முஸ்லீங்கள் யாபேருஞ்சேம முற்றிருந்திடவே
பயம் நீங்கவே
ஜெயம் மோங்கவே—வேணும்
ஜெகமதில் முகம்மதலி என்னும் பாவலன்—வாழ்கவே
செல்வம் நீழ்கவே.